


கடலூர் மேற்கு மாவட்டக் கழக, விருத்தாசலம் நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணி, சார்பில் கழக அரசின் நிதிநிலை விளக்கம் மற்றும் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், விருத்தாசலத்தில் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். நகரச் செயலாளர் க.தண்டபாணி, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், மாவட்ட கழக பொருளாளர் ஜி.தண்டபாணி உரையாற்றினர். நகர மன்ற தலைவர்கள் , மாவட்ட, ஒன்றிய, நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், நகரச் செயலாளர் க.தண்டபாணி, ஒன்றியச் செயலாளர்கள் மற்றும் இளைஞரணி, சார்பு பணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகி கலந்து கொண்டனர்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாகர்கோவில் மாநகரத்தில் “எல்லோருக்கும் எல்லாம்” திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நாகர்கோவில், வேப்பமூடு சந்திப்பு, பொன்னப்பநாடார் திடலில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் – மேயர் ரெ. மகேஸ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் என்.தில்லை செல்வம், என். சுரேஷ் ராஜன், கேட்சன், விஜிலா சத்தியானந்த், வழக்கறிஞர் ப. ஆனந்த், இ. ஜவஹர் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




